**மேதகு ஆளுநர் உரையின் மீது நடைபெற்ற விவாதத்தின் போது நில அபகரிப்பு தடுப்புப் பிரிவு அரசாணை குறித்து இன்று (20.2.2015) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் ஆற்றிய உரை:–**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முந்தைய திமுக ஆட்சியில், மாநிலத்தில் சமூக விரோத கும்பல்களின் உதவியுடன் நிலம் மற்றும் சொத்துக்களின் உரிமையாளர்களை மிரட்டி அவர்களைக் கடத்திச் சென்று, அவர்களின் சொத்துக்களை மிகக் குறைந்த விலைக்கு பதிவு செய்வதையும், போலியான ஆவணங்கள் தயார் செய்து, பொதுமக்களின் சொத்துக்களை தங்கள் பெயரில் பதிவு செய்வதையும் வாடிக்கையாகக் கொண்டிருந்ததன் காரணமாக நில உரிமையாளர்கள் தங்கள் சொத்துக்களுக்கு உத்தரவாதமின்றி மனம் குமுறி வேதனைபட்டுக் கொண்டிருந்தனர். முந்தைய மைனாரிட்டி திமுக ஆட்சியின் போது வீடுகள், மனைகள் மற்றும் நிலங்கள் வைத்திருப்பவர்கள் தங்கள் சொத்து பறிபோய்விடுமோ என்ற கவலையுடன் வாழ்ந்தனர். கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள தனியார் சொத்துக்கள் நில அபகரிப்பு கும்பலால் போலி ஆவணங்கள் மூலமும் மிரட்டி பறிக்கப்பட்டன. நகரப் பகுதிகளிலோ, பிரதான சாலைகளிலோ வீடோ மனையோ வைத்திருப்போர் தான் விரும்பும் நபருக்கு உரிய விலைக்கு விற்கமுடியாத சூழ்நிலை இருந்தது. அதிகார மையத்தில் இருந்த நபர்கள் கை காட்டும் நபர்களுக்கு அடிமாட்டு விலைக்கு விற்பதற்கு நில உரிமையாளர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். பெரிய அளவில் சொத்துகளை வாங்கவோ, விற்கவோ ஒருவர் விரும்பினால், அந்தந்த பகுதிகளில் உள்ள அதிகார மையத்திற்கு தொடர்புடைய பிரமுகர்களைச் சந்தித்து அவர்களுடைய அனுமதியைப் பெற்ற பின்னர் தான் பத்திரம் பதிவு செய்ய முடியும் என்ற நிலை இருந்தது. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் 2011–ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்தின்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அஇஅதிமுக ஆட்சி அமைக்கப்பட்டவுடன் நில அபகரிப்பாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என வாக்குறுதி அளித்தார்கள்.

2011 ஆம் ஆண்டு மே மாதம் மூன்றாம் முறையாக இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் நிலம் மற்றும் சொத்து அபகரிப்பு செயல்களில் ஈடுபட்ட நபர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள முடிவெடுத்தார்கள். அதன்படி நில அபகரிப்பு புகார்களை கையாளுவதற்கென காவல் துறையில் மாவட்ட வாரியாக 39 நில அபகரிப்பு தடுப்பு சிறப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு, ஒவ்வொரு நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவிலும் தலா ஒரு காவல் துணை கண்காணிப்பாளர், ஒரு ஆய்வாளர் மற்றும் காவலர்கள் பணியமர்த்தப்பட்டனர். மேலும், நில அபகரிப்பு வழக்குகளை விசாரணை செய்வதற்கென 25 சிறப்பு நீதிமன்றங்களை அமைக்கவும் அரசு உத்தரவிட்டது.

இதனைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட பொதுமக்கள் நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவுகளில் கடந்த காலத்தில் தங்கள் சொத்துக்களை பறி கொடுத்தது பற்றி புகார் மனுக்கள் கொடுத்தனர். அம்மனுக்கள் அனைத்தையும் இப்பிரிவினர் எந்தவித குறுக்கீடுமின்றி விசாரித்து, புகார்களில் உண்மை இருப்பின், அப்புகார்கள் மீது வழக்குகள் பதிவு செய்து, போதுமான சாட்சியங்களை சேகரித்து எதிரிகளைக் கைது செய்து, நடவடிக்கை எடுத்துள்ளனர். சில புகார்களில், எதிர்மனுதாரர்கள், தாங்கள் அபகரித்த சொத்துக்களை புகார்தாரருக்கு திருப்பித் தரும் நிலையிலோ அல்லது உண்மையான மதிப்பின் படி அச்சொத்துக்களுக்கான தொகையை புகார்தாரருக்கு திருப்பி அளிக்கும் நிலையிலோ, புகார்தாரர் ஒப்புக் கொண்டு, புகாரைத் திரும்ப பெறும் சூழ்நிலையில் அதுபோன்ற புகார்களை நியாயமான முறையில் முடித்து வைத்துள்ளனர். அளிக்கப்பட்ட புகார்கள் உண்மைக்குப் புறம்பானதாக இருந்தாலோ, பாகப் பிரிவினை போன்ற சிவில் பிரச்சனை தொடர்பானதாக இருந்தாலோ அல்லது நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் இருந்தாலோ அப்புகார்களின் மேல் நடவடிக்கை கைவிடப்பட்டு, மனுதாரர்கள் சிவில் நீதிமன்றத்தில் நிவாரணம் தேடிக் கொள்ளும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக, நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவுகள் துவக்கப்பட்டதிலிருந்து 31.12.2014 வரை பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட புகார்களின் மீது 2,838 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 2,905 எதிரிகள்

கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்குகளில் இதுவரையில் ரூ.2,354 கோடி மதிப்புள்ள 4,870 ஏக்கர் நிலம் மற்றும் 32,19,384 சதுர அடி வீட்டு மனைகள் அபகரிப்பாளர்களிடமிருந்து மீட்கப்பட்டு, 2,637 நில உரிமையாளர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவ்வழக்குகளில் கைது செய்யப்பட்டவர்களுள், 53 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டனர்.

இதுநாள்வரை பதிவு செய்யப்பட்ட 2,838 வழக்குகளில், 660 வழக்குகளில் குற்றப் பத்திரிக்கை நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு, அவற்றுள் மூன்று வழக்குகளில் எதிரிகளுக்கு தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. 1,532 வழக்குகள் உரிய ஆவணங்கள் சேகரிக்கவும், சேகரித்த ஆவணங்களை சரிபார்க்கவும் மற்றும் சட்ட நிபுணர்களின் கருத்து பெறுவதற்காகவும் புலன் விசாரணையில் இருந்து வருகின்றன. மீதமுள்ள 643 வழக்குகளில் மேல் நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது.

நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவுகள் மற்றும் சிறப்பு நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டதை எதிர்த்து நீதிமன்றங்களில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அம்மனுக்களை விசாரணை செய்த உயர்நீதிமன்றம், 10.02.2015 அன்று நிலஅபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவுகள் மற்றும் சிறப்பு நீதிமன்றங்கள் ஆகியவற்றை அமைத்து பிறப்பித்த அரசாணைகளை ரத்து செய்தும், அரசு விருப்பப்பட்டால், இது சம்பந்தமாக தற்போதுள்ள குறைகளை நீக்கி ஒரு புதிய சட்டத்தை இயற்றலாம் என தெரிவித்து அம்மனுக்களை அனுமதித்தது.

Land grab (நில அபகரிப்பு) என்ற தொடரின் பொருள் அரசு ஆணையில் வரையறுக்கப்படவில்லை என்ற கருத்தை தெரிவித்து நில அபகரிப்புத் தடுப்பு சிறப்புப் பிரிவுகளைத் தோற்றுவித்த அரசு ஆணையை ரத்து செய்து உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உயர்நீதிமன்றத்தின் இந்த உத்தரவை சரியாக புரிந்து கொள்ளாத சில ஊடகங்களும், தனி நபர்களும் நில அபகரிப்பு வழக்குகள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டன என்ற ஒரு தவறான கருத்தை திணிக்க முற்படுகின்றனர். உயர்நீதிமன்றத்தின் இந்த உத்தரவின்படி நில அபகரிப்பு புகார்களை விசாரிப்பதற்கென நியமிக்கப்பட்ட தனிப் பிரிவுகள் தொடர்ந்து அவ்வாறு தனிப்

பிரிவுகளாக செயல்பட இயலாது என்பது மட்டும்தான் இந்த தீர்ப்பின் பொருள் ஆகும். நான் மேலே குறிப்பிட்டபடி நில அபகரிப்பாளர்களிடமிருந்து மீட்கப்பட்டு நில உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்ட **2,354** கோடி ரூபாய் மதிப்புள்ள நிலங்கள் மற்றும் வீட்டுமனைகளை மீண்டும் நில அபகரிப்பாளர்களே அபகரித்துக் கொள்ளலாம் என்று நினைத்தால் அது சரியல்ல என்றும் உயர்நீதிமன்றத்தின் ஆணை இது வரை இந்த அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை செல்லாததாக ஆக்கி விடவில்லை என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் நில அபரிகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவுகள் அமைக்கப்பட்டதற்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்களில் முக்கியமானவர்கள் தி.மு.க.வும் தி.மு.க.வைச் சார்ந்த வழக்கறிஞர் ஒருவரும் தான். இந்த வழக்குகளுக்கு வழக்கறிஞர்களாக ஆஜரான வழக்கறிஞர்களும் திமுகவைச் சேர்ந்தவர்கள் தான். பொது நல வழக்காக தி.மு.க தொடர்ந்த வழக்கு ஏற்கத்தக்கதல்ல என உயர்நீதிமன்றம் ஏற்கனவே தள்ளுபடி செய்து விட்டது. இது போன்ற வழக்கை தி.மு.க.வும், தி.மு.க. வழக்கறிஞரும் தாக்கல் செய்ததன் மூலம் நில அபகரிப்பு குற்றங்களிலிருந்தும், வழக்குகளிலிருந்தும் தப்பித்துக் கொள்ளலாம் என்றும் சிவில் வழக்குகள் மூலம் இவற்றை இழுத்தடித்து குற்றவியல் நடவடிக்கைகளில் இருந்து தற்காத்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்திலும் தெரிவிக்கப்பட்ட வாதங்களை உயர்நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே தான் உயர்நீதிமன்றம் தனது உத்தரவில் தெரிவித்திருப்பது :

‘‘**28.7.2011** ஆம் நாளிட்ட அரசாணையானது, **1963**-ஆம் ஆண்டு குறித்தவகை நிவாரணச் சட்டம், **1882**-ஆம் ஆண்டு சொத்துரிமை மாற்றுச் சட்டம், **1872**-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் மற்றும் **1963**-ம் ஆண்டு கால வரையறைச் சட்டம் ஆகியவற்றின் வகை முறைகளுக்கு முரணானதாகவும், அதன் வரம்பிற்கு அப்பாற்பட்டதாகவும் இருப்பதாக நீதிப்பேராணை மனு எண்.**1872/2011**-ல், மனுதாரரின் சார்பில் மூத்த வழக்கறிஞர் எடுத்துரைத்தார். மேலும் அவர், பாதிக்கப்பட்ட நபர் உரிய நிவாரணம் பெறுவதற்காக மேற்படி சட்டங்களில் வழிவகை

செய்யப்பட்டுள்ளதாகவும், பாதிக்கப்பட்ட நபர் மேற்படி சட்டங்களின் கீழ் ஒரு வழக்கு தொடர்வதன் மூலம் பொய்யாகவும், புனைந்துரைத்தும் செய்யப்பட்ட நில மாற்றம் செல்லத்தக்கது அல்ல என்று விளம்புகை செய்வதற்கு வழிவகை உள்ளது என்றும் கூறினார். மேற்சொன்ன வாதமானது இந்நீதிமன்றத்தின் மேலான கருத்தில் ஏற்றுக் கொள்ள இயலாத ஒன்றாகும். ஏனெனில் மரபு வழி உரிமையியல் சட்டத்திற்கு அப்பாற்பட்டு பாதிக்கப்பட்ட நபர் எவரும் தனியாக (நீதி மன்றத்தில்) புகார் அளிக்கவோ அல்லது அவரது எல்லைக்குட்பட்ட காவல் துறையிடம் புகார் அளிக்கவோ வழிகள் உள்ளதோடு மட்டுமின்றி இந்த நிவாரணமானது உரிமையியல் வழக்கு தொடர்வது அல்லது உரிமையியல் சட்டத்தின் மூலம் தகுந்த நடவடிக்கை தொடர்வதிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும்.''

நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவுகள், நில அபகரிப்பு என தனியே குறிப்பிட்டு எந்த குற்றப்பத்திரிக்கையும் தாக்கல் செய்வதில்லை. ஏனெனில், நில அபகரிப்பு குற்றத்திற்கான கூறுகள் இந்திய தண்டனைச் சட்டத்திலேயே வகைப்படுத்தப்பட்டுள்ளவை தான். ஏமாற்றுதல், பத்திர மோசடி, அத்துமீறல் போன்ற குற்றங்கள் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் தான் பதிவு செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் தான் குற்றப்பத்திரிக்கைகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. விசாரணையில் உள்ள நேர்வுகளிலும் குற்றங்களின் தன்மைக்கேற்ப வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும்.

உயர்நீதிமன்றத்தின் இந்த ஆணையை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் சிறப்பு விடுப்பு மனு **17.2.2015** அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

*******